பாரத தேசிய பௌதிக ஆராய்ச்சிசாலை டைரக்டரும்

புகழ்பெற்ற

உலக விஞ்ஞான மேதைகளில் ஒருவரும்

டில்லி தமிழ்ச் சங்கத் தலைவருமான

உயர்திரு.

## டாக்டர் K. S. கிருஷ்ணன் F. R. S. அவர்களுக்கு

12-9-1959 சனிக்கிழமை

ஸ்ரீரங்கம் நகர மன்றத்தார் உவந்தளித்த

# வரவேற்பு பத்திரம்.

**பாரதநாட்டின் பௌதிக விஞ்ஞானப் பேரறிஞரே!**

இருபுறம் பொன்னி வலம் சூழ்ந்த ஸ்ரீரங்கம் என்னும் இப்பழம் பெரும் திருப்பதிக்கு வருகை தந்துள்ள, பாரத விஞ்ஞான நிபுணராகிய தங்களுக்கு மக்கள் அனைவரின் நன்மதிப்பார்ந்த நல்வரவேற்பை இந்நகர்மன்றம் உவந்தளிக்கிறது.

தங்களை ஈன்றெடுத்த தமிழன்னை, உலக விஞ்ஞான அரங்கிற்கும் பாரத தேசிய உயர்வுக்கும் தங்களை வழங்கிப் பெருஞ்சிறப்படைந்திருக்கிறாள். படைப் பின் பௌதிக மர்மங்களில் சிந்தை ஊன்றிப் புதுப்புது உண்மைகளைக் கண்டறிந்து உலகுக்கு உதவும் தாங்கள் பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்களிலும், சமய நூல்களிலும் ஆழ்ந்து திளைத்து அவற்றின் அருமை பெருமைகளையும் அவ்வப்பொழுது மக்களுக்கு வழங்கிவருவது தமிழகத்திற்கே பெருமை தருவதாகும்.

தங்கள் தமிழ்ப்பெரும் புலமையினால் கல்கத்தாவில் பாரதி தமிழ்ச் சங்கம் தோன்ற உதவினீர்கள். டில்லி வாழ் தமிழ் மக்களின் சங்கத்திற்கும் தலைமை தாங்குகிறீர்கள். பாரதப் பிரதமரும் ஜனாதிபதியும் மதித்து, பாரத பூஷண் என்ற விருதும் அளித்துத் தங்களைச் சிறப்பித்திருக்கிறார்கள். இத்தகைய நன்மகனைப் பெற்ற தமிழன்னை பெற்ற பேறு தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் பெற்ற பெரும் பேறு.

ஸ்ரீரங்கம் தங்களைக் கவர்வதில் வியப்பில்லை. அவ்வளவு ஆழ்ந்த பக்தி யுடைய உள்ளம் தங்களுடையது. இவ்வரிய வாய்ப்பைக்கொண்டு தங்களை வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம். தங்களுக்கு எங்கள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீரங்கம்,
12—9—59.

தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள்,
ஸ்ரீரங்கம் நகர மன்றம்.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்–678/400.